| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.02.01 |

**ஆளும் சபை ஆறு புதிய உதவி ஆளுநர்களை நியமித்துள்ளது**

ஆளும் சபை, 2024 சனவரி 19 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் முனைவர். சி. அமரசேகர, திருமதி, டபிள்யூ.ஏ. டில்ருக்ஷினி, முனைவர். பி.கே.ஜி. ஹரிஸ்சந்திர, திருமதி. டி.எஸ்.டபிள்யூ. சமரதுங்க, திருமதி. ஈ.எச். மொஹொட்டி, திருமதி. ஆர்.டீ.ரி. குணசேகர ஆகியோரை 2024 சனவரி 22 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உதவி ஆளுநர்கள் பதவிக்கு பதவி உயர்த்தியுள்ளது.

**முனைவர். சி. அமரசேகர**



முனைவர். அமரசேகர 21 ஆண்டுகளுக்கு மேல் மத்திய வங்கியில் பணியாற்றியுள்ளார். இவர் இலங்கை, இந்தியா, வங்காளதேசம் மற்றும் பூட்டான் தொகுதியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய அமெரிக்காவின் வொசிங்கடன் டீசி நகரில் அமைந்துள்ள பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். இவர், மத்திய வங்கியில், நாணயக் கொள்கை மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விடயப்பரப்புக்களில் சிறப்பியல்புபெற்று வேறுபட்ட பதவிகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் தீவிரமாக பணியாற்றியதுடன் 2019-2021 வரையான காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராகவும் இருந்தார். நாணயக் கொள்கைக் குழுவின் நீடித்து நிலைத்த உறுப்பினராகவும் செயலாளராகவும் பணியாற்றியதற்கு மேலதிகமாக, முனைவர். அமரசேகர நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு, சந்தை தொழிற்பாடுகள் குழு, வெளிநாட்டு படுகடன் முகாமைத்துவக் குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழு, பயிற்சிக் குழு மற்றும் நூலக மதியுரைக் குழு ஆகிய குழுக்களின் உறுப்பினராகவும் திகழ்ந்தார். இவர், ஹெக்டர் கொபேக்கடுவ வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினராகவும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சிப் பணிக் குழுவின் உறுப்பினராகவும் விளங்கினார்.

நாணயக் கொள்கை மற்றும் வேறு மத்திய வங்கி தொழில் கருப்பொருட்கள் பற்றிய முனைவர் அமரசேகரவின் ஆராய்ச்சி பல பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டுள்ளதுடன் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கோள் காட்டப்படுகின்றது. 2015-2020 வரையான காலப்பகுதியில், அலுவலர் ஆய்வுத் தொடர்கள், மத்திய வங்கியின் சஞ்சிகை என்பவற்றின் ஆசிரியராவார். இவர், பல்கலைக்கழங்கள், இலங்கை வங்கியாளர் நிறுவகம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் போன்றவை உட்பட பல்வேறு கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ நிறுவனங்களில் வருகைதரு விரிவுரையாளாராகவும், பரீட்சிப்பாளாராகவும், வினா விடைப் போட்டித் தலைவராகவும் முன்வந்துள்ளார்.

முனைவர். அமரசேகர ஐக்கிய இராச்சியத்தில் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முனைவர் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தில் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் கலைமானிப் பட்டத்தையும் பெற்றவராவார். இவர் சட்டத்தரணியுமாவார்.

**திருமதி. டபிள்யூ.ஏ. டில்ருக்ஷினி**



திருமதி. டில்ருக்ஷினி மத்திய வங்கியில் 23 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தைப் பொறுப்பேற்க முன்னர் பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் ஆகிய திணைக்களங்களில் வேறுபட்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார். திருமதி. டில்ருக்ஷினி விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிதியியல் நிலைமை உறுதிப்பாடு என்பன தொடர்பில் கொள்கை வகுப்பதில் நிபுணத்துவத்தைக் கொண்டவராவார். மேலும், இலங்கை மத்திய வங்கியில் நிலைபெறத்தக்க நிதி முன்முயற்சிகளுக்கு இவர் தலைமைத்துவம் வகித்தார். இவர், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் உறுப்பினராவதுடன், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மேற்பார்வைக் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திருமதி. டில்ருக்ஷினி அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச மற்றும் அபிவிருத்திப் பொருளியலில் முதுமானிப் பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் விசேட கலைமானிப் பட்டத்தையும் பெற்றவராவார். இவர் தற்போது சிறி ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து (PIM) வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டம் பெறுவதற்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

**முனைவர். பி.கே.ஜி. ஹரிஸ்சந்திர**



முனைவர். ஹரிஸ்சந்திர, அவர்கள் 2022 ஏப்பிறல் தொடக்கம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றுவதற்கு முன்னர் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களங்களில் வேறுபட்ட பதவிகளில் 21 ஆண்டுகளுக்கு மேல் மத்திய வங்கியில் பணியாற்றியுள்ளார். இவர், இலங்கை, இந்தியா, வங்காளதேசம், பூட்டான் தொகுதியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய அமெரிக்காவின் வொசிங்கடன் டீசி நகரில் பன்னாட்டு நாணய நிதியத்தில் பெயர் குறிக்கப்பட்ட மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராவதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தில் இவரது பதவிக் காலம் 2024 பெப்புருவரி தொடக்கம் ஆரம்பமாகும்.

இவர் ஏனையவற்றுக்கு மத்தியில் நாணயக் கொள்கைக் குழு, சந்தைத் தொழிற்பாடுகள் குழு, மற்றும் பணியாற்றுக் குழு (கொழும்புத் துறைமுக நகரின் பன்னாட்டு நிதியியல் மையத்தினைத் தாபித்தல்) மற்றும் பசுமை நிதி மீளாய்வுக் குழு என்பவற்றின் உறுப்பினரொருவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஆய்வு மதியுரைக் குழுவின் தலைவராகவிருந்தார். மேலும், இவர் நிதி அமைச்சின் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியுள்ளார்.

முனைவர் ஹரிஸ்சந்திர ஐக்கிய இராச்சியத்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முனைவர் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தில் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**திருமதி. டி.டபிள்யூ. சமரதுங்க**



திருமதி. சமரதுங்க, 2021 தொடக்கம் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளராக பணியாற்றுவதற்கு முன்னார் புள்ளிவிபரவியல், பொருளாதார ஆராய்ச்சி, வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களங்களில் வேறுபட்ட பதவிகளில் 23 ஆண்டுகளுக்கு மேல் மத்திய வங்கியில் பணியாற்றியுள்ளார். இவர், ஏறத்தாழ இரு ஆண்டுகளுக்கு பொருளாதார விவகாரங்கள் - பணிப்பாளராகப் பணியாற்றுவதற்காகவும் 2015 பெப்புருவரியில் நிதி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

திருமதி. சமரதுங்க கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் மற்றும் நிதி விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து புள்ளிவிபரவியல் விஞ்ஞானமானிப் பட்டத்தையும் பெற்றவராவார்.

**திருமதி. ஈ.எச். மொஹொட்டி**



திருமதி. மொஹொட்டி மத்திய வங்கியில் 23 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் வங்கி மேற்பார்வை, செயலகம், பன்னாட்டுத் தொழிற்பாடுகள், பொதுப் படுகடன், பிரதேச அபிவிருத்தி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் தொடர்பூட்டல் திணைக்களங்களின் வேறுபட்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

திருமதி. மொஹொட்டி சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் (பொது நிருவாகம்) விஞ்ஞானமானிப் பட்டத்தையும் அவுஸ்திரேலியா, மெல்போர்ன் மொனாஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார முதுமானி (வங்கித்தொழில் மற்றும் நிதி) பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**திருமதி. ஆர்.டி.ரி. குணசேகர**



திருமதி. குணசேகர, 2021 தொடக்கம் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புப் பணிப்பாளராகப் பணியாற்றுவதற்கு முன்னர் செயலகம், பொதுப் படுகடன், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பூட்டல் திணைக்களங்களில் வேறுபட்ட பதவிகளில் 23 ஆண்டுகளுக்கு மேல் மத்திய வங்கியில் பணியாற்றியுள்ளார்.

திருமதி. குணசேகர அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வியாபாரத்தில் முதுமானிப் பட்டத்தையும் சிறி ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் சிறி ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தில் பட்டயம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CIMA) சக உறுப்பினரொருவருமாவார்.